www.Paritchai.com



All Rights Reserved

# தென் மாகாணக் கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிப் பரீட்சை - 2017

## தரம் 10

## வரலாறு - I

பெயர் /சுட்டெண் :- ........................................................ காலம்: 1 மணித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக
- இல 01 முதல் 40 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க
- நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமக்கு தரப்பட்டுள்ள புள்ளடித்தாளில் சரியான கூட்டில் (x) அடையாளம் இடுக.

01. வரலாற்றை ஆய்வு செய்யும் போது தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரதான மூலாதார வகைகள் இரண்டுமாவன,
    1. அரசியல் மூலாதாரங்களும் இலக்கிய மூலாதாரங்களும்
    2. இலக்கிய மூலாதாரங்களும் தொல்பொருள் மூலாதாரங்களும்
    3. தொல்பொருள் மூலாதாரங்களும் வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்களும்
    4. உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களும் தொல்பொருள் மூலாதாரங்களும்

2. புராதன காலத்தில் பிரதான வீதிகளில் கல்வையில் இருந்து கல்வைக்கு கற்றூண்கள் நடப்பட்டன. அவை என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டன.
   (1) காவற்கல் 2. வடாபொத 3. காவுத கணு 4. கொன்குரய

3. எமது நாட்டில் கிடைக்கப்பெற்ற மிகப் புராதன நாணயம் என்ன பெயரால் அழைக்கப்படுகிறது?
   1. கஹபண 2. தம்பமஸ்ஸ 3. தரண 4. லக்ஷ்மி

04. 'x' நிரலை'y' நிரலோடு தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடை

| 'X' | 'y' |
|---|---|
| 1. மணிகாரகாம | A- விவசாயிகள் வாழும் கிராமம் |
| 2. வட்டகீ காம | B- மீனவர் வாழ்ந்த கிராமம் |
| 3. கசீகார காம | C- இரத்தினம் அகழ்வோர் பட்டை தீட்டுவோர் வாழ்ந்த கிராமம் |
| 4. கோபாலகாம | D- தச்சர் வாழ்ந்த கிராமம் |
| | E- இடையர் வாழ்ந்த கிராமம் |

1. CDAE 2. DCAE 3. BDAE 4. ABCD

05. மனித எலும்புக் கூடு வளைத்துப் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட கற்காலத்துக்குரிய புதை குழிகண்டெடுக்கப்பட்ட இடம்
    1. இராவன எல்லை குகை 2. பாகியன் கல் குகை
    3. அத்தனகொட அலுலென 4. குருவிட்ட பட்டதொம்பலென

06. சுமணவின் குடும்பத்தைச் சேர்ந்த உலோகக் கைத்தொழில் மேற்கொண்டு இருந்த இல்லத்தலைவன் ஒருவன் பிக்குமார்களின் சேமநலன் கருதி கற்குகை ஒன்றை சுத்தம் செய்து தானமளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு
    1. கலுதியபொகுனை 2. பெரிய புளியன்குளம்
    3. கொஸ்கல் கந்நை 4. துனுமடலா கந்நை



kalvi.lk
Scanned by CamScanner

07. இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்,
1. மகா பராக்கிரமபாகு மன்னன்
2. தேவநம்பிய தீச மன்னன்
3. வசப மன்னன்
4. மானவம்ம மன்னன்

08. X நிரலிலே வகித்த பதவியும் Y நிரலிலே அதற்குரிய பதவிப் பெயரும் வழங்கப்பட்டுள்ளது. சரியான முறையில் பொருத்தினால் வரும் விடையாவது.

| | X | Y |
|---|---|---|
| 1. | குதிரைப்பிரிவின் தலைவர் | A சேனபதி |
| 2. | அமைச்சர்கள் | B ருப அதெக |
| 3. | காசு அச்சிடும் பிரிவின் தலைவர் | C பதகு |
| 4. | தளபதிகள் | D அச அதெக |
| | | E அமெத |

1. BECA 2. DEBA 3. DECA 4. DCBA

09. பிரதேச பரிபாலனம் பருமகர்களிடம் காணப்பட்டது என்பதை குறிப்பிட்டிருந்த கல்வெட்டு கிடைத்த பிரதேசம்
1. கண்டலம பிரதேசம்
2. சிதுல்பவ்வ பிரதேசம்
3. எம்புல் அம்பே பிரதேசம்
4. முல்லைத்தீவுப் பிரதேசம்

10. தான் ஒருவைத்தியனாக இருந்த அதேவேளை வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதிலும் மிகவும் ஆர்வம்மிக்க மன்னனாக காணப்பட்டவர்
1. நான்காம் காசியப்ப மன்னன்
2. புத்தாச மன்னன்
3. முதலாம் உபதிஸ்ஸ மன்னன்
4. ஐந்தாம் மஹிந்தன் மன்னன்

Education கல்வி

11. திருகோணமலை பழைய கோகண்ண தித்த படகுத்துறைக்கு அண்மையில் அமைந்துள்ள இந்து கோயிலாவது
1. முன்னேஸ்வரம் கோயில்
2. நல்லூர் கோயில்
3. திருக்கேதீஸ்வரம் கோயில்
4. கோணேஸ்வரம் கோயில்

12. X நிரலுக்கு பொருந்துமாறு Y நிரலை இணைத்தால் வரும் சரியான விடையைத் தெரிவு செய்க

| X | Y |
|---|---|
| 1- மகாசேன மன்னன் | A-- பசவக் குளம் |
| 2- தேவநம்பியதீச மன்னன் | B- கலாவாவி |
| 3- பண்டுகாபய மன்னன் | C- கிரித லே குளம் |
| 4- தாதுசேன மன்னன் | D- மின்னேரியா குளம் |
| E- திசாவாவி | |

1. DEBA 2. DCAD 3. DEAB 4. CEAB

13. பிக்குனி சங்கமித்தை, மகா போதியை (வெள்ளரசமரக்கிளை) எடுத்து வந்து இந்நாட்டில் இறங்கிய படகுத்துறையாவது
1. ஜம்புகோளப்பட்டினம்
2. லங்காபடுனை
3. கொடவாய
4. மகாதித்த

14. மகா விஜயபாகுவின் பணிகளில் ஆகக்கூடிய முன்னுரிமை வழங்க வேண்டிய சேவையானது.
1. அயல் நாடுகளுடன் திருமணத் தொடர்புகளை வைத்துக் கொண்டமை
2. குளம், கால்வாய்களையும் விகாரைகளையும் புனர்நிர்மாணம் செய்தமை
3. சோழர்களை விரட்டி பொலன்னறுவையை தனது இராஜதானியாக்கிக் கொண்டமை
4. சிவனொளி பாதமலை அடிச்சுவடு பூஜைகளை நடாத்தியமை



kalvi.lk
Scanned by CamScanner

பின்வரும் தகவல்களை அவதானித்து 15, 16 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக

A. ஆங்குல B. குஞ்சா C. அண D. பரமாணு E. சுவர்ண

15. தூரத்தை அளந்தலோடு தொடர்புடைய விடையாவது
1. BC  2. AD  3. AE  4. DC

16. பாரத்தை அளத்தலோடு தொடர்புடைய விடையானது,
1. EC  2.BD  3. BC  4. BE

17. பண்டைய காலத்திலே குளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவோரிடம் இருந்து அறவிடப்பட்ட வரியானது
1. கெதிளட, கெடுகனக  2. தக்கபதி
3. போஜக்கபதி  4. மதரமஞ்சக்க

18. மகாவிஜயபாகு காலத்தில் பொலன்னறுவை தலதாமாளிகையின் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டது,
1. வேலைக்காரப்படையிடம்  2. திராவிடப்படையிடம்
3. தரைப்படையிடம்  4. லஸ்கிரிஞ்ஞ படையிடம்

19. கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் 'பதுபாச்சிகா' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நூலாவது
1. சத்தர்மலங்காரய  2. தம்பியா அட்டுவா கெட்டபத
3. ரசவாஹிணி  4. சாரசங்கிரஹய

20. இந்நாட்டின் புராதன விவசாயம் பற்றி எழுதப்பட்டுள்ள தோணிகல கல்வெட்டானது பின்வரும் எந்த மன்னன் காலத்துக்கு உரியதாகும்?
1. இரண்டாம் அக்போ மன்னன்  2. வலகம்பா மன்னன்
3. கீர்த்தி மேகவர்ண மன்னன்  4. இரண்டாம் முகலன் மன்னன்

21. தலைமைப் பிக்குகளை அண்டி வாழும் மாணவ பிக்குகள் புராதன கல்வெட்டுக்களிலே எவ்வாறு எழுதப்பட்டிருந்தது?
1. அந்தேவாசி  2. தேரர்  3. பாணக  4. சத்திவிஹகரிய

22. பொலன்னறுவை இராஜதானி வீழ்ச்சியடைந்தமைக்கான உடனடிக்காரணமாக அமைவது
1. பலவீனமான மன்னர்கள் ஆட்சிபீடம் ஏறியமை
2. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
3. பொருளாதார வீழ்ச்சி
4. கலிங்க, பாண்டிய வம்சங்களிடையே ஏற்பட்ட ஆட்சியதிகாரப் போராட்டம்

23. 'x' நிரலுக்கு பொருத்தமாக 'y' நிரலைப் பொருந்தினால் வரும் சரியான விடையாவது

| X | y |
|---|---|
| 1 கிரிகெரி | A வாசனைப் பொருட்கள் |
| 2. எம்புல் ஹம்பு | B பசுக்கள் |
| 3. பலசரக்கு | C கஞ்சி |
| 4.யவாகு | D இலைக்கஞ்சி |

1. BDAC  2. ABCD  3. BADC  4. BDCA

24. புராதன காலத்தில் இரும்பை உருக்குவதற்காக இயற்கையாக வீசும் காற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட ஒரு சூளை கண்டுபிடிக்கப்பட்ட இடமாவது,
1. சீகிரிய பொதானை  2. தேஹிகஹ எலகந்தை
3. பலாங்கொடை சமனலவெவ  4. அலிகல

25. தெடிகம யானை விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது பின்வரும் இடங்களில் எந்த இடத்திலாகும்?
(1) அபயகிரி தாதுகோபம்  (2) சூதிகர சைத்தியம்
(3) தெமழ மகாசாய  (4) லாஹுகல நீலகிரி சைத்தியம்



www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

26. பெலிகலையில் தலதாமாளிகை அமைத்து கொத்மலையில் இருந்த புனித சின்னங்களைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்த மன்னன்
   (1) முதலாம் விமலதர்ம சூரியன் மன்னன்
   (2) மகா விஜயபாகு மன்னன்
   (3) வலகம்பா மன்னன்
   (4) மூன்றாம் விஜயபாகு மன்னன்

27. கம்பளை காலத்தில் நிஸ்ஸங்க அழகேஸ்வர எனும் அமைச்சரால் பலம் வாய்ந்த கோட்டை ஒன்று அமைக்கப்பட்ட இடமாவது
   (1) கம்பளை   (2) கோட்டே   (3) யாப்பகுவை   (4) குருநாகலை

28. 1505 இல் போத்துகேயர் முதன் முதல் இலங்கைக்கு வருகை தந்த போது கோட்டே இராஜதானியின் மன்னனாக இருந்தவர்.
   (1) 6ம் பராக்கிரமபாகு மன்னன்   (2) ஜயபாகு மன்னன்
   (3) 7ம் பராக்கிரமபாகு மன்னன்   (4) 8ம் வீர பராக்கிரமபாகு மன்னன்

29. யாபகுவ கோட்டைக்குரிய படிவரிசை மற்றும் தூண்களில் காணக்கூடிய கலைப்பாரம்பரியமாவது,
   (1) பாண்டிய மற்றும் கம்பூச்சிய
   (2) பாண்டிய மற்றும் சோழ
   (3) காம்பூச்சிய மற்றும் சீன
   (4) பர்மிய மற்றும் கம்பூச்சிய

30. பின்வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற கால ஒழுங்கில் எழுதுவதாயின் வரும் சரியான விடையாவது,
   A – மகாவிஜயபாகு மன்னன், காலிங்க இளவரசி திரிலோக சுந்தரியை திருமணம் செய்தல்
   B- இரண்டாம் இராஜசிங்க மன்னன் போத்துகேயர்களை விரட்டுதல்
   C- பிக்குனி சங்கமித்தை வெள்ளை அரச மரக்கிளையைக் கொண்டு வருதல்
   D- சம்புமல் குமாரன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல்
   E- வலகம்பா மன்னன் அபயகிரி விகாரையைக் கட்டுதல்
   (1) ECDBA   (2) ABCDE   (3) CEADB   (4) CADEB

31. 1411ல் பாரிய படையொன்றுடன் இலங்கை வந்த செங்ஹோ தளபதி வீர அழகேஸ்வரனுடன் போரிட்டு அவனையும் இன்னும் சிலரையும் கைதிகளாகச் சீனாவுக்கு கொண்டுசென்றான். இந்நிகழ்ச்சி எந்த தலைநகர் காலத்திலே இடம் பெற்றது.
   (1) குருநாகலை   (2) கம்பளை   (3) யாப்பகுவை   (4) தம்பதெனிய

32. யாழ்ப்பாண இராஜதானியின் முதல் ஆட்சியாளனாக கருத முடியுமானவன்,
   (1) விஜய கூழாங்கை   (2) விக்கிரம்   (3) குலசேகரம்   (4) வரோதயன்

33. புதிய அரச பரம்பரை ஒன்றை உருவாக்கிய முதலாம் விமலதர்மசூரியன் எதிர் கொண்ட சவால்களின் ஒன்றல்லாதது,
   (1) சட்டரீதியான அரச பரம்பரை தன்னிடம் இல்லாதிருந்தமை
   (2) மலையகத்தை சீதாவக்கை இராஜதானியிலிருந்து மீட்டிக்கொள்ள வேண்டி இருந்தமை
   (3) வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் சாசனத்தைப் பாதுகாக்க வேண்டி இருந்தமை
   (4) மலையகத்தை ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டி இருந்தமை

34. 'X' நிரலுக்குப் பொருத்தமான 'Y' நிரலை தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடையானது

| 'X' | 'Y' |
|---|---|
| 1 மடிகே பத்த | A சட்டிபானை வனைதல் |
| 2 குருவெ பத்த | B புடைவை கழுவுதல் |
| 3 படஹெல பத்த | C புடைவை நெய்தல் |
| 4 ஹெத பத்த | D போக்குவர்த்து நடவடிக்கைகள் |
| | E யானைகள் பிடித்தல் |

   (1) DECA   (2) DEAB   (3) DEBC   (4) DEAC



kalvi.lk
Scanned by CamScanner

35. கி.பி 1453ல் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பாவின் பிரதான வணிக நகரமானது
(1) வெனிஸ்
(2) கொன்ஸ்தந்திநோபிள்
(3) ஜெனோவா
(4) புளோரன்ஸ்

36. ''நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை'' எனப் போற்றப்படுவர்,
(1) ஜொஹென்ஸ் கெப்லர் (2) கலிலியோ கலிலி
(3) நிக்கலஸ் கொபர்னிகஸ (4) ஐசக் நியுட்டன்

37. 1498 ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா இந்தியாவில் தரையிறங்கிய துறைமுகமானது,
(1) கள்ளிக்கோட்டை (2) மதுரை (3) கோவா (4) பாண்டிச்சேரி

38. மலையக இராஜதானிக்கும் போத்துகேயர்களுக்கும் இடையே நடைபெற்ற போர் ஒன்றாக கருத முடியாதது,
(1) தந்துரே (2) முல்லேரியா (3) பலனை (4) ரந்தெனிவெல

39. எந்தவொரு விலங்கினையும் கொலை செய்யக் கூடாது என்று முதல் முதல் சட்டமியற்றிய மன்னன்,
(1) 4 ஆம் மகிந்தன் மன்னன் (2) நான்காம் உதயன் மன்னன்
(3) ஆமண்ட காமினி அபய மன்னன் (4) 5ம் காசியப்ப மன்னன்

40. முன்வரலாற்றுக் காலத்து மானிட வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்வதற்கு பிரதான தடயங்கள் கிடைத்த இடமானது,
(1) பட்டதொம்பலேன (2) பெல்லன்பதிபலஸ்ஸ
(3) பாகியன் கல (4) உடரஞ்சாமடம்

(02x40=80 புள்ளிகள்)

www.Paritchai.com
Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk
Scanned by CamScanner

All Rights Reserved

# தென் மாகாணக் கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிப் பரீட்சை - 2017

## தரம் 10

## வரலாறு - II

பெயர் /சுட்டெண் :- ........................................................ காலம்: 3 மணித்தியாலயம்

- பகுதி I இன் முதலாவது வினா கட்டாயமானது
- பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

01.(அ) கீழே (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும் (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) ஜம்புகோளப்பட்டினம், மாதோட்டை, கோகண்ணதித்த, மாணிக்க கங்கை, பட்டதொம்பலென, பராக்கிரம சமுத்திரம், கோட்டை, மகாவாலுகாகம், கதம்ப நதி, பூநகரி, கோதபப்பத, கம்பளை (12 புள்ளிகள்)

(ii) போர்த்துகல, பத்தேவியா, செங்கடல், உரோம், பெரிய பிரிந்தானியா கோவா (06 புள்ளிகள்)

(ஆ) (i) மேல்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. 44 ஆண்டுகள் இலங்கையை ஆக்கிரமித்திருந்த தென் இந்திய ஆக்கிரமிப்பாளன்.
B. கண்டி இராஜதானியின் கடைசி சிங்கள பரம்பரை மன்னன்
C. துட்டகைமுனு மன்னனுக்கு உறுதுணையாக இருந்து அவரது தாயார்
D. 1602 இல் இலங்கை வந்த ஒல்லாந்து தூதவர் (04 புள்ளிகள்)

A.B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடை தாளில் எழுதுக.



A

(ii) 1. இந்த உருவில் காட்டப்படும் கற்குகையின் பெயர் யாது?
2. இந்த கற்குகை அமைந்துள்ள மாவட்டம் யாது?
3. இந்த குகைக்குள்ளே எந்த வரலாற்று யுகத்தவர்கள் வாழ்ந்ததாக கருதப்படுகிறது?
4. சுமார் எத்தனை ஆண்டுகளுக்கு முன் இங்கே மனித கலாசாரம் நிலவியுள்ளது? (04 புள்ளிகள்)



B

(iii) 1. இந்த உருவில் காட்டப்படும் அரசன் யார்?
2. இந்த சிலை எந்த இடத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது?
3. இந்த அரசன் எந்த தலைநகர் காலத்துக்குரியவர்?
4. இந்த அரசன் காலத்தில் எந்நாட்டிலிருந்து கண்ணாடி மணிகள் வருவிக்கப்பட்டன? (04 புள்ளிகள்)



www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

பகுதி II

(02)(i) புராதன காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை பற்றிய குறிப்புகளை எழுதிய பின்வரும் நாடுகளைச் சேர்ந்தோர் ஒவ்வொருவரை எழுதுக?

A- அரேபியா (B) சீனா C- போர்த்துகல

(03 புள்ளிகள்)

(ii) கற்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) கி.பி 2 ஆம் நூற்றாண்டிலிருந்து கண்டிய இராச்சியக் காலம் வரை இலங்கையில் கல்வெட்டுக்கள் தொடர்ந்தும் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறான கல்வெட்டுக்களில் எழுதப்பட்டுள்ள விடயங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) வரலாற்றைக் கற்பதன் மூலம் ஆளுமை விருத்தி ஏற்படும் என்பதை மூன்று காரணிகளுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(03) (i) பின்வரும் தூபிகளைக் கட்டிய அரசர்களின் பெயர்களை எழுதுக.

A- தூபாராம B. ஜேதவனராமய c- அபயகிரி (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட

A-தாழ்நில ஈரவலயக் குகைகள் இரண்டு

B-மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலம் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

(iii) துட்டகைமுனு மன்னன் செய்த சமய பணிகள் பற்றியும் அரசியல் பணிகள் பற்றியும் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) எமது நாட்டை ஆண்ட பண்டைய மன்னர்கள் அயல் நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டனர், என்பதை மூன்று உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(04) (i) 11,12,13 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையிலே வணிகம் செய்த தென் இந்திய நிறுவனங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் தகவல்களுக்குப் பொருத்தமான கல்வெட்டுக்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக. (04 புள்ளிகள்)

(லெஹெரகம, மண்டகல, சிதுல்பவ்வ, முதுகல்ல, கொடவாய, சேகிரிய)

A- இரும்புக் கைத்தொழில்

B- யானைத் தந்த செதுக்கல் கைத்தொழில்

C- நெசவுக் கைத்தொழில்

D- இரத்தினக் கைத்தொழில்

(iii) புராதன குளமொன்றில் காணப்படுகின்ற பிரதான அங்கங்கள் (உறுப்புகள்) மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் தொழில்பாட்டையும் தருக. (05 புள்ளிகள்)

(iv) தம்பதெனியாவை ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரபாகு ஆற்றிய அரசியல், இலக்கிய பணிகள் பற்றி உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(05) (i) இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் இலங்கையோடு வணிக தொடர்புகளை வைத்திருந்த மூன்று நாடுகள் தருக. (03 புள்ளிகள்)

(ii) புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(iii) இராஜரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்த பின்னர் தென்மேற்கு தலைநகரங்கள் காலத்தில் காணப்பட்ட பொருளாதார அமைப்பு மூன்றினை எழுதி அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கோட்டை தலைநகர் காலத்தில் சிங்கள இலக்கியத்துறை வளர்ச்சி அடைந்த விதம் பற்றி மூன்று உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

06 (i) கண்டி இராஜதானி காலத்தில் பின்வரும் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிலம் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டது, (03 புள்ளிகள்)

A – விகாரைகளுக்கு தானமளிக்கப்பட்டவை

B – அரசமாளிகைக்காக பயன்படுத்தப்பட்டவை

C- பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்டவை



kalvi.lk

Scanned by CamScanner

(ii) A B C D என்றவாறு கேட்கப்படும் கூற்றுக்களுக்கான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக. (04 புள்ளிகள்)

A – மலையக இராஜதானியின் முதலாவது நாயக்க அரசன்
B - மூன்று மலையக அரசர்களுக்கு மனைவியாக இருந்தவர்
C – கண்டி இராஜதானியில் உழைப்பு பரிமாற்றப்பட்ட முறை
D - கண்டிய அரசமாளிகை யானைகளுக்குப் பொறுப்பான அதிகாரி

(சுனேத்திரா தேவி, அத்தம் முறை, ஸ்ரீ விஜய இராஜசிங்கன், தியவடன நிலமே, ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன், வியதி முறை, கஜநாயக்க நிலமே, குசுமாசனதேவி)

(iii) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் மன்னன் இந்நாட்டின் பௌத்த சமய வளர்ச்சிக்காக ஆற்றிய தொண்டுகள் மூன்றினை எழுதுக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராஜதானி காலத்தில் கண்டிய கிராமிய சமூகத்திலே காணப்பட்ட முக்கியமான பண்புகள் மூன்றினைக் கூறி அவற்றில் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

07. (i) 1505ல் போத்துகேயர் இந்நாட்டுக்கு வருகை தந்தபோது இலங்கையில் காணப்பட்ட மூன்று இராச்சியங்களும் எவை? (03 புள்ளிகள்)

(ii) போத்துகேயர்களின் ஆசிய வருகைக்கான நோக்கங்கள் இரண்டினை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) சீதாவக்கை இராஜதானி வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினை எழுதுக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோளில் காணப்படும் சிறப்பியல்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி III

(08) (i) மறுமலர்ச்சிக் காலத்தில் திருச்சபையை விமர்சித்தவர்களில் முக்கியமானவர்கள் மூவரை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வருவனவற்றோடு தொடர்புடைய நபர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதக. (04 புள்ளிகள்)

(பெரசலசஸ், கலிலியோ கலிலி, மைகல் சர்வேஸ். வில்லியம் ஹாவே, ஜொஹன்னஸ் குட்டன்பேக், ஜொஹன்னஸ் கெப்லர்)

A- தொலை நோக்கி
B- அச்சியந்திரம்
C- குருதிச் சுற்றோட்டம்
D- நோய் ஏற்படுவதற்கான காரணம், சிகிச்சை

(iii) மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சிக் காலத்தில் ஆக்கங்களை வெளிப்படுத்திய
A லியனாடோ டார்வின்சி
B மைக்கல் அஞ்சலோ ஆகியோர் செய்த ஆக்கங்கள் பற்றி சுருக்கமாக எழுதுக (06 புள்ளிகள்)

(09) (i) பின்வரும் இடங்களைக் கண்டுபிடித்த நாடுகாண் பயணிகளின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

A. மேற்கிந்திய தீவு B- பிலிப்பைன்ஸ் C- கனடா

(ii) மறுமலர்ச்சிக் காலத்தின் பின்னர் ஐரோப்பாவின் வணிக நடவடிக்கைகளில் முன்னுரிமை நிலைக்கு வந்த நாடுகள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவின் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள் மூன்றைக் கூறி அவற்றுள் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) புதிய கடல் வழியைக் கண்டு பிடிக்கக்கூடிய சாதகமான சூழல் மறுமலர்ச்சிக் காலத்தில் நிலவியது. இவ்வாறான சாதகமான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக. (06 புள்ளிகள்)



www.Paritchai.com

kalvi.lk

Scanned by CamScanner

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page